ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்கா தேவி சரணம்...கனகதுர்க்கா தேவி சரணம்

துர்க்கை அம்மனைத் துதித்தால் என்றும்
துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயாம் அவளை
தரிசனம் கண்டால் போதும்
கர்ம வினைகள் ஓடும்
சர்வ மங்களம்கூடும் (ஜெய ஜெய தேவி )

பொற்கரங்கள் பதினெட்டும் .. நம்மைச்
சுற்றிவரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்கமப்பொட்டும்
வெற்றிப் பாதையைக் காட்டும்
ஆயிரம் கண்கள் உடையவளே
ஆதிசக்தி அவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே
தாய் போல் நம்மைக் காப்பவளே (ஜெய ஜெய தேவி )

சங்கு சக்கரம் வில்லும் அம்பும்
மின்னும் வாளும் வேலுடன் சூலமும்
தங்கக் கைகளில் தாங்கி நிற்பாள்
சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள்
திங்களை முடிமேல் சூடி நின்றாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள்
மங்கையற் கரசியும் அவளே – எங்கள்
அங்கயற் கண்ணியும் அவளே. (ஜெய ஜெய தேவி )